**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.6/19</u>**

2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.பெருமாள், என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | - | திரு.பெருமாள், |
| வயது | - | |
| தந்தை/கணவர் பெயர் | - | த.பெ.சோமசுந்தரம் |
| கிராமம் | - | செய்யார் |
| வட்டம் | - | |
| சாதி | - | |
| சமயம் | - | |
| தொழில் | - | |

<u>26.04.2023</u>

<u>வா.சா.1.</u>

என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன். 29.05.2017 தேதியிட்ட சோமசுந்தரத்தின் வாரிசுகள் எனக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். ( **29.05.2017 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1.ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 30.10.2018 அன்று எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு தாக்கல் செய்துள்ளேன். (**30.10.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் உண்மை நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இவ்வழக்கு பிராதுடன் தாவா சொத்து குறித்த மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். ( **மாதிரி வரைபடம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ) 07.02.1997 தேதியிட்ட மகாராஜா என்பவரக்கு ஜெயராமன்

மற்றும் தனசேகர் ஆகியோர்கள் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். ( **07.02.1997 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 14.08.2006 தேதியிட்ட வழக்கின் பிரதிவாதி பழனி என்பவருக்கு மகாராஜன் என்பவர் எழுதிகொடுத்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்துள்ளேன். (**14.08.2006 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது) வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது, மாதிரி வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடைய பிரமாணத்தை ஏற்று தாவாபடி தீர்ப்பாக வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.